# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2010 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கம்) சட்டம்

*(2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2010, திசெம்பர் மாதம் 10 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 2.50*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

**2010 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கம்) சட்டம்**

[2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 12/2010

**1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கும் 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தின் நீக்கத்தின் விளைவாந்தன்மைக்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கம்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்.*

**2.** 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டம் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பயனுறுவதாக நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

*1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்கம் செய்தல்.*

**3.** இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்க தொழில்முயற்சிகள் சீர்திருந்த ஆணைக்குழுச் சட்டம் நீக்கப்படுவதன் மேல் –

*நிலைபெயர் கால ஏற்பாடுகள்.*

(அ) நீக்கப்பட்ட தேதிக்கு நேர் முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் அத்தகைய அலுவலர்களின் அல்லது ஊழியர்களின் சேவைகள் பகிரங்கத் தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு அத்தியாவசியமானவை என திறைசேரிச் செயலாளரால் கருதப்படின், நீக்கப்

பட்ட தேதியிலிருந்து பகிரங்க சேவை ஆணைக் குழுவின் அங்கீகாரத்துடன் பகிரங்கத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் அலுவலர்களாகவும் ஊழியர்களாகவும் ஆட்சேர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அலுவலர்களும் ஊழியர்களும் நீக்கப்பட்ட தேதியிலிருந்து இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின்கீழ் அவர்களினால் துய்க்கப்பட்ட நியதிநிபந்தனைகளைவிடக் குறையாத அனுகூலமான நியதிநிபந்தனைகள்மீது பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தில் பதவிவகித்தலும் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட நியதிநிபந்தனைகள் அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் தனிப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நீக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையும் அல்லது பயனுள்ளனவாக இருப்பவையும், அவற்றுக்கு இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு ஒரு திறத்தவராக உள்ளவையும் அல்லது ஆணைக்குழுவின் பெயரில் இருப்பவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், உத்தரவாதங்களும், அற்றோணித் தத்துவங்களும், சட்டப் பிரதிநிதித்துவ அளிப்புகளும் மற்றும் எத்தன்மையினவையுமான ஏனைய சாசனங்களும், நீக்கப்பட்ட தேதியிலிருந்து விடயத்துக்கேற்ப இலங்கை அரசாங்கத்தினால் செய்துகொள்ளப்பட்ட அல்லது அதன்பெயரில் அளிக்கப்பட்ட ஒப்பந்தங்களாகவும், உறுதிகளாகவும், முறிகளாகவும், உடன்படிக்கைகளாகவும், உத்தரவாதங்களாகவும், அற்றோணித் தத்துவங்களாகவும், சட்டப் பிரதிநிதித்துவ அளிப்புகளாகவும் மற்றும் எத்தன்மையினவையுமான ஏனைய சாசனங்களாகவும் கருதப்படுதலும் வேண்டும் ;

(இ) இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும் நீக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எத்தன்மையினவுமான எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கை

களும், நீக்கப்பட்ட தேதியிலிருந்து இலங்கை அரசாங்கத்தால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும்படலாம் ;

(ஈ) நீக்கப்பட்ட நாளுக்கு உடன் முற்போந்த நாளன்று பயனுள்ளதாக இருக்கும் ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் சார்பாக அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தினால் பதிவீடு செய்யப்படும் எல்லாத் தீர்ப்புகளும், தீர்வைகளும் அல்லது கட்டளைகளும், நீக்கப்பட்ட தேதியிலிருந்து இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அல்லது அதற்கெதிராக பதிவீடு செய்யப்பட்ட தீர்ப்பொன்றாக, தீர்வை அல்லது கட்டளையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சொத்துக் களையும் பொறுப்புக் களையும் உரித்தாக்குதல்.*

**4**. நீக்கப்பட்ட தேதியன்று பயனுள்ளவையாக இருக்கும் இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நீக்கப்பட்ட தேதியிலிருந்து இலங்கை அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள் கோடல்.*

**6**. இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

"இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு" என்பது, 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைப் பகிரங்கத் தொழில்முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழு என்று பொருள்படும். ;

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்